உ

கடவுள்துணை.

தேவராயசுவாமிகள் அருளிச்செய்த

கந்தர்சஷ்டி கவசம்.

இஃது,
திருத்தணிகை
சுப்பிரமணியசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு.

சித்தூர்
வீராசாமிநாயுடு குமாரர்
இராஜகோபாலுநாயுடு அவர்களால்
சென்னை-புரசை
அபிராமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1900.

உ

கடவுள்துணை.

கந்தர்சஷ்டி கவசம்.

அமரரிடர்தீர அமரம்புரிந்த
குமரனடி நெஞ்சேகுறி.

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம்பலித்துக் கதித்
தோங்கும் நிஷ்டையுங்கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக்கவசந்தனை.

சஷ்டியைநோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக்குதவுஞ் செங்கதிர்வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச்சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட
மையநடனஞ்செயு மயில்வாகனனார்
கையில்வேலாலெனைக் காக்கவென்றும்

வரவரவேலா யுதனார்வருக
வருகவருக மயிலோன்வருக
இந்திரன்முதலா யெண்டிசைபோற்ற
மந்திரவடிவேல் வருகவருக
வாசவன்மருகா வருகவருக
நேசக்குறமக ணினைவோன்வருக
ஆறுமுகம்படைத்த ஐயவருக
நீறிடும்வேலவ னித்தம்வருக
சிரகிரிவேலன் சீக்கிரம்வருக
சரவணபவனார் சடுதியில்வருக
ரஹணபவசரரரரரரர
ரிஹணபவசரிரிரிரிரிரிரி
விணபவசரவண வீராநமோநமோ
நிபவசரவண நிறநிறநிறென
வசரணபவ வருகவருக
அசுரர்குடிகெடுத்த ஐயவருக
என்னையாளும் இளையோன்வருக
பன்னிரண்டாயுதப் பாசாங்குசமும்
பரந்தவிழிகள் பன்னிரண்டிலங்க

விரைந்தெனைக்காக்க வேலோன்வருக
ஐயுங்கிலியும் அடைவுடன்சௌவும்
உய்யொலியௌவும் உயிரையுங்கிலியும்
கிலியுஞ்சவ்வும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தமுமொளிரும்
சண்முகம்நீயும் தனியொளியொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன்றினம்வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடுநெற்றியும் நீண்டபுருவமும்
பன்னிருகண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறிநெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறுசெவியில் இலகுகுண்டலமும்
ஆறிருதிண்புயத் தழகியமார்பில்
பலபூஷணமும் பதக்கமும்தரித்த
நன்மணிபூண்ட நவரத்நமாலையும்
முப்புரிநூலு முத்தணிமார்பும்
செப்பருகுடைய திருவயிறுந்தியும்
துவண்டமருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்நம்பதித்த நற்சீராவும்

இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலிமுழங்க
செககணசெககண செககணசெககண
மொகமொகமொக மொகமொகமொகென
நகநகநகநக நகநகநகநகென
டிகுகுணடிகு டிகுகுணடிகுண
ரரரரரரரரரரரரரரர
ரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரிரி
டுடுடுடுடுடுடுடுடுடுடுடுடுடு.
டகுடகுடிகுடிகு டங்குடிங்கு
விந்துவிந்து மயிலோன்விந்து
முந்துமுந்து முருகவேண்முந்து
எந்தனையாளும் ஏரகச்செல்வ
மைந்தன்வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலாலாலாலாலாவேசமும்
லீலாலீலாலீலா விநோதனென்
றுன்திருவடியை யுறுதியென்றெண்ணும்
என்றனைவைத்துன் னிணையடிகாக்க
என்னுயிர்க்குயிரா மிறைவன்காக்க

பன்னிருவிழியால் பாலனைக்காக்க
அடியேன்வசனம் அழகுவேல்காக்க
பொடியுனெற்றியைப் புனிதவேல்காக்க
கதிர்வேலிரண்டுங் கண்ணினைக்காக்க
விதிசெவியிரண்டும் வேலவர்காக்க
நாசிகளிரண்டும் நல்வேல்காக்க
பேசியவாய்தனைப் பெருவேல்காக்க
முப்பத்திருபல் முனைவேல்காக்க
செப்பியநாவைச் செவ்வேல்காக்க
கன்னமிரண்டுங் கதிர்வேல்காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல்காக்க
மார்பையிரத்ன வடிவேல்காக்க
சேரிளமுலைமார் திருவேல்காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக்காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல்காக்க
அழகுடன்முதுகை யருள்வேல்காக்க
பழுபதினாறும் பருவேல்காக்க
வெற்றிவேல்வயிற்றை விளங்கவேகாக்கச்
சிற்றிடையழகுறச் செவ்வேல்காக்க

நாணாங்கயிற்றை நல்வேல்காக்க
ஆண்குறியிரண்டும் அருள்வேல்காக்க
பிட்டமிரண்டும் பெருவேல்காக்க
வட்டக்குதத்தை வடிவேல்காக்க
பணைத்தொடையிரண்டும் பகர்வேல்காக்க
கணைக்கால்முழந்தாள் கதிர்வேல்காக்க
ஐவிரலடியினை யருள்வேல்காக்க
கைகளிரண்டுங் கருணைவேல்காக்க
முன்கையிரண்டும் முரண்வேல்காக்க
பின்கையிரண்டும பின்னவளிருக்க
நாவிற்சரஸ்வதி நற்றுணையாக
நாபிக்கமல நல்வேல்காக்க
முப்பாணாடியை முனைவேல்காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல்காக்க
அடியேன்வசனம் அசைவுளநேரம்
கடுகவேவந்து கனகவேல்காக்க
வரும்பகறன்னில் வச்சிரவேல்காக்க
அனையிருடன்னி லனையவேல்காக்க
ஏமத்திற்சாமத்தி லெதிர்வேல்காக்க

தாமதநீக்கிச் சதுர்வேல்காக்க
காக்கக்காக்கக் கனகவேல்காக்க
நோக்கநோக்க நொடியினோக்க
தாக்கத்தாக்கத் தடையறத்தாக்க
பார்க்கப்பார்க்கப் பாவம்பொடிபட
பில்லிசூனியம் பெரும்பகையகல
வல்லிபூதம் வலாஷ்டிகப்பேய்கள்
அல்லற்படுத்தும் அடைக்காமுனியும்
பிள்ளைகடின்னும் புறக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத்தொடரும் பிரமராட்சசரும்
அடியேனைக்கண்டால் அலறிக்கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துடன்சேனையும்
எல்லிலுமிருட்டிலு மெதிர்படுமண்ணையும்
கனபூசைகொள்ளுங் காளியோடனைவரும்
விட்டாங்காரரு மிகுபலபேய்களும்
தண்டியக்காரருஞ் சண்டாளர்களும்
என்பெயர்சொல்லவு மிடிவிழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்

பூனைமயிரும் பிள்ளைகளென்பும்
நகமுமயிரும் நீண்முடிமண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற்புதைத்த வஞ்சனைதனையும்
ஒட்டியச்செருக்கும் ஒட்டியப்பாவையும்
காசுமபணமும் காவுடன்சோறும்
ஓதுமஞ்சனமு மொருவழிப்போக்கும்
அடியேனைக்கண்டா லலைந்துகுலைந்திட
மாற்றானவஞ்சகர் வந்துவணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சிநடுங்கிட அலண்டுபுரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினின்முட்டப் பாசக்கயிற்றால்
கட்டுடைக்குங் கதறிடக்கட்டு
கட்டியுருட்டிக் கால்கைமுறியக்
கூட்டுகட்டு கதறிடக்கட்டு
முட்டுமுட்டு முழிகள்பிதுங்கிட
செக்குசெக்கு செதில்செதிலாக
சொக்குசொக்கு சூர்பகைசொக்கு

குத்துகுத்து கூர்வடிவேலால்
பற்றுபற்று பகலவன்றணலெரி
தணலெரிதணலெரி தணலதுவாக
விடுவிடுவேலை வெருண்டதுஓட
புலியுநரியும் புன்னரிநாயும்
எலியுங்கரடியு மினித்தொடர்ந்தோடத்
தேளும்பாம்புஞ் செய்யான்பூரான்
கடிவிடவிஷங்கள் கடித்துயரங்கள்
ஏறியவிஷங்க ளெளிதினிலிறங்க
ஒளிப்புஞ்சுளுக்கு மொருதலைநோயும்
வாதஞ்சயித்தியம் வலிப்புப்பித்தம்
சூலைசயங்குன்மஞ் சொக்குச்சிரங்கு
குடைச்சல்சிலந்தி குடல்விப்புரிதி
பக்கப்பிளவு படர்த்தொடைவாழை
கடுவன்படுவன் கைத்தாள்சிலந்தி
பற்குத்தருணை பருவரையாப்பும்
எல்லாப்பிணியு மென்றனைக்கண்டால்
நில்லாதோட நீயெனக்கருள்வாய்
ஈரேழுலகமு மெனக்குறவாக

ஆணும்பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரு மகிழ்ந்துறவாகவும்
உன்னைத்துதிக்க உன்றிருநாமம்
சரவணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொளிபவனே
அரிதிருமருகா அமராபதியை
காத்துத்தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வேலவனே
கார்த்திகைமைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனையழித்த இனியவேன்முருகா
தணிகாசலனே சங்கரன்புதல்வா
கதிர்காகமத்துறை கதிர்வேன்முருகா
பழனிப்பதிவாழ் பாலகுமாரா
ஆவினன்குடிவாழ் அழகியவேலா
செந்தின்மாமலையுறுஞ் செங்கல்வராயா
சமராபுரிவாழ் சண்முகத்தரசே
காரார்குழலாள் கலைமகணன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட

எனைத்தொடர்ந்திருக்கு மெந்தைமுருகனே
பாடினேனாடினேன் பரவசமாக
ஆடினேனாடினேன் ஆவினன்பூதியை
நேசமுடன்யா நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றதுநீங்கி
உன்பதம்பெறவே யுன்னருளாக
அன்புடனிரட்சி அன்னமுஞ்சொர்ணமும்
மெத்தமெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன்வாழ்க.
வாழ்கவாழ்க மயிலோன்வாழ்க
வாழ்கவாழ்க வடிவேல்வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்கவாழ்க வாரணத்துவசன்
வாழ்கவாழ்கவென் வறுமைகணீங்க
எத்தனைகுறைகள் எத்தனைபிழைகள்
எத்தனையடியேன் எத்தனைசெய்தால்
பெற்றநீகுரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள்குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரியமளித்து

வஞ்சனென்மீது மனமகிழ்ந்தருளி
தஞ்சமென்றடியர் தழைத்திடவருள்செய்
கந்தர்சஷ்டிக் கவசம்விரும்பிப்
பாலனதேவராயன் பகர்ந்ததைக்
காலையின் மாலையின் கருத்துடனாளும்
ஆசாரத்துட னங்கந்துலங்கி
நேசமுடனொரு நினைவதுவாகி
கந்தர்சஷ்டி கவசமிதனைச்
சிந்தைபகலாது தியானிப்பவர்கள்
ஒருநாண்முப்பத் தாறுருகொண்டு
ஓதியேசெபித்து உகந்துநீறணிய
அட்டதிக்குள்ளோ ரடங்கலும்வசமாய்
திசைமன்னரெண்மா செயலதைவருள்வார்
மாற்றலரெல்லாம் வந்துவணங்குவார்
நவகோளமகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதனெனவும் நல்லெழிற்பெறுவர்
எந்தநாளு மீரெட்டாய்வாழ்வர்
கந்தர்கைவேலாங் கவசத்தடியை
வழியாய்க்காண மெய்யாய்விளங்கும்

விழியாற்காண வெருண்டிடும்பேய்கள்
பொல்லாதவனைப் பொடிபொடியாக்கும்
நல்லோர்நிலைவில் நடனம்புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி.
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமுதளித்த
குருபரன்பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக்குழந்தை சேவடிபோற்றி
எனைத்தடுத்தாட்கொள வென்றனதுள்ளம்
மேவியவடிவுறும் வேலவாபோற்றி
தேவர்கள்சேனா பதியேபோற்றி
குறமகள் மனமகிழ் கோவேபோற்றி
திறமிகுதிவ்விய தேகாபோற்றி
இடும்பாயுதனே இடும்பாபோற்றி
கடம்பாபோற்றி கந்தாபோற்றி
வெற்றிபுனையும் வேளேபோற்றி
உயர்கிரிகனக சபைக்கோரரசே

மயினடமிடுவோய் மலரடிசரணம்

சரணஞ்சரணஞ் சரவணபவஓம்

சரணஞ்சரணஞ் சண்முகாசரணம்.

கந்தர்சஷ்டிகவசம்.

முற்றிற்று.